**லங்கா சதொச லிமிடட்– 2018/2019**

-----------------------------------------------

லங்கா சதொச லிமிடட் கம்பனியின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. எனது கருத்துக்களும் அவதானிப்புக்களுக்கும் இணங்க எனது அறிக்கை இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**01. நிதிக்கூற்றுக்கள்**

------------------------------

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

1.2 **நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்**

-----------------------------------------------------------------------------------------------

2003 யுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2007 இன் 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**02. ஏனைய சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச்சட்டத்தில் உள்ள விஷேட ஏற்பாடுகள்.

2007 ம் ஆண்டு 07ம் கம்பனிச் சட்டம் பிரிவு 150(1) ன்படி ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பொறுப்பான நபரை உறுதி செய்வது கம்பனியின் இயன்குனர்சபையின் பொறுப்பாகும்.

**2.1 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும்தன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட அரிசயின் மூலம் நிறுவனத்திற்கு ஏற்பபட்ட இழப்பு ரூபா 10,929,943,402 காரணமாக நிறுவனத்தின் இந்த விடயம் காரணமாக கம்பனிக்கு தனது சொத்துக்களினால் தனது பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமை மற்றும் கம்பனி தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமை என்பன நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்றன. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மீது உரிய கவனம் எடுப்பதற்கும் அவ்வாறான நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல். |

**2.2 சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்று டனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 மே 15ம் திகதிய பொது வியாபார சுற்றறிக்கை இல பீஈடி 1/2015ன் பிரிவு 3.1 மற்றும் 3.2 | குறித்த சுற்றிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்திற்காக வரையறுக்கப்பட்ட எரிபொருள் செலவுக்கு மேலதிகமாக 2018 மற்றும் 2019ம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட தொகை முறையே ரூபா 88,589 81,760 இயக்குனர் சபையின் சிபார்சுடன் | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படாமல் வழங்கப்பட்டுள்ளது. | |

## 2.3 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 10 வங்கிக் கணக்குகளுக்கான வங்கிக் கணக்கிணக்க கூற்று தயாரிக்கபபடாமல் காணப்பட்டது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | ஒவ்வொரு மாத முடிவிலும் வங்கிக் கணக்கிணக்க கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வாகன அணி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் ரூபா 5,400,000 மற்றும் 13,300,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்கள 2017ம் ஆண்டில் நிரல் அமைச்சுக்கு இணைக்கப்பட்டு அதன் பின்னர் உரிய வாகனம் தரமற்ற முறையில் சரியான முறைமையின்றி மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,400,00 பெறுமதியான வாகனம் செயலற்றுக் காணப்படுகின்றது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | நிறுவனத்திற்கு வினைத்திறன்மிக்க வகையில் வாகனத்தினை திருத்துதல் அல்லது அழித்தல் |
| (ஆ) | செயற்பாட்டு குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவன தலைவரினால் பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்களுக்குமான ஒட்டப் பதிவேடு மற்றும் மாதாந்த சுருக்கம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களுக்கான ஓட்டபதிவேடு பேணப்படவில்லை. | குறித்த வாகனங்களுக்கு ஒட்டப்பதிவேடு மற்றும் மாதாந்த சுருக்கம் என்பனவற்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பாய்வாண்டில் புதிய விற்பனை நிலையங்களை திறத்தல், கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துதல், விற்பனை நிலையங்களை மேம்படுத்துதல், பாதுகாப்பு கெமரா பொருத்துதல் போன்ற செயற்றிட்டங்களுக்காக திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 500 மில்லியனில் ரூபா 438.7மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதில் ரூபா 15 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துததில் ரூபா 12.3 மில்லியன் செலவு செய்யப்பட்டு 100 சதவீதம் பு்ர்த்தி செய்யப்பட்டிருந்தது, ரூபா 80 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பாதுகாப்பு கெமரா பொருத்துதல் செயற்றிட்டத்தில் அதில் ரூபா 48 மில்லியன் செலவு செய்யப்பட்டு 71 சதவீதம் பூர்த்தியடைந்திருந்தது. இருந்தும் புதிய விற்பனை நிலையங்கள் திறப்பதற்காக ரூபா 150 மில்லியனும் அதற்கு மேலதிகமாக ரூபா 126.1 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 26 சதவீதம் மாத்திரம் பூர்த்தியடைந்திருந்தது. விற்பனை நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் தற்காலிகமாக விற்பனை நிலையங்களை நிறுவுதல. என்பவற்றுக்கு ஒதுக்கீடாக ரூபா 118 மில்லியன் காட்டப்பட்ட போதிலும் அதற்கான முறையான ஒதுக்கீடாக ரூபா 27 மில்லியன் காணப்பட்டது. இருப்பினும் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | திறைசேரியினால் வழங்கப்படும் ஒதுக்கீடுகளை வினைத்திறன்மிக்கதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிறுவனமானது தனது இருப்பு முகாமைத்துவத்தினை பேணுவதற்காக 2016ம் ஆண்டு தொடக்கம் 2019ம் ஆண்டுவரை இச் செயற்பாட்டினை ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது. இந்த உடன்படிக்கையானது 2019ம் ஆண்டு !ன் மாதத்துடன் இடைநிறுத்தப்பட்டடிருந்தது. இருப்பினும் கணக்காய்வு திகதியான 2019ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி உரிய களஞ்சியசாலையில் ரூபா42,764,243 பெறுமதியான பொருட்கள் எதுவித நடவடிக்கைகளுமின்றி காணப்பட்டது. அவற்றில் வழங்ககூடிய பொருட்கள், காலாவதியான பொருட்கள், காலாவதியாவதற்கு குறுங்காலம் காணப்படும் பொருட்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் இருந்து திருப்பப்பட்டவை என்பன முறையே ரூபா 4,369,485, ரூபா 18,744,895 மற்றும் ரூபா19,649,861 உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையானது ஏற்படுவதற்கு சரியான மேற்பர்வை இல்லாததன் காரணமாக அமைந்திருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ம் ஆண்டு !ன் 02ம் திகதிய சுற்றறிக்கை இல பீஈடீ/12ன் பிரிவு 8.3.9 ற்கு மாறாக நிறுவனத்திற்கு சொந்தமான வாகனம் நிரல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு அதற்காக மதிப்பாய்வாண்டில் நிறுவனத்தினால் ரூபா 346,704 மீளப்பெறப்படாத செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 சிக்கலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை. | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாதுகாப்பு தொடர்பான நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவானது நிறுவனத்திடமிருந்து மீளப்பெறப்படுகின்றது. அதனடிப்படையில் முறையான அங்கீகாரமின்றி மாதந்தம் ரூபா 65,000 படி 2018 !ன் மாதம் தொடக்கம் 2019 செப்தம்பர் வரை ரூபா 1,040,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் உரிய உத்தியோகத்தரினால் சேவைக்காலத்தின் போது நிறுவனத்தின் வாகனமும் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | மேலதிக சேவையானது உடன்படிக்கை மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இயக்குனர்சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். |

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 4246. ஆனால் தற்போது காணப்படுகின்ற பதவியணியினர் 3859 ஆகும். இதன் மூலம் 990 ஊழிய பற்றாக்குறையும் 603 மிகையும் காணப்படுகின்றது. விற்பனை நிலையங்களின் அதிகரிப்புக்கேற்ப அனுமதிக்கபட்ட பதவிகளுக்குத் தொடர்புடைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். விற்பனை நிலையங்களில் காணப்படுகின்ற உத்திரோயகத்தர்களுக்கான பதவி உயர்வு வழங்களின் ஏற்பட்டுள்ள காலதாமத்தின் காரணமான இவ்வாறான மேலதிகம் ,பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணீயினர்க்கு மாத்த்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தினால் 2017ம் ஆண்டு ஆட்சேர்ப்பு திட்ட முறைமையானது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லைஇ வ்வாறு அங்கீகரிக்கப்படாத ஆட்சேர்ப்பு திட்ட முறைமைக்கேற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சரியான ஆட்சேர்ப்பு திட்ட முறைமை அங்கிகரிக்கப்பட்டிருத்த ல் வேண்டும். |
| (இ) | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வின் போது பிரதம நிறைவேற்று அதிகரி உள்ளடங்கலாக ஆறு முகாமை மட்ட உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்படாத போலியான கல்விச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவர்கள் தற்போது இடைநிறுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதிலும் இவ் அறிக்கை திகதிவரைக்கும் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இவ் உத்தியோகத்தர்களுக்கு உரிய காலப்பகுதியன் போது சம்களமும் படியுமாக ரூபா 23,143,170 செலுத்தப்பட்டிருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சம்மந்தப்பட்ட தரப்பினர் தொடர்பாக தேவையான நடிவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.9 தாமதமான மூலதன வேலைத்திட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | உடன்படிக்கையின் பிரகாரம் 15 மாதங்களுக்குள் முடிவுறுத்தப்பட வழங்கப்பட்ட ரூபா198,175,784 பெறுமதியான செயற்றிட்த்திற்கான கால நீடிப்பு முறையான அனுமதியின்றி வழங்கப்பட்டுள்ளது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | விரைவில் உரிய செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (ii) | உரிய தரப்பினரால் செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படாததனால் நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவு உத்தியோகத்தர்களினால் சில | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பின்னர் கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிகள பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மற்றும் உரிய செயற்றிட்டம் 29 மாதங்கள் கடந்தும் பூர்த்தி செய்யப்படாத போதிலும் 30 சதவீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | ஒப்பந்தங்காரர் வேறு நிறுவனத்திற்கு பகுதியளவில் அல்லது உப ஒப்பந்தம் வழங்கியதனால் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக ஏற்பட்ட நட்டத்திற்கு உரிய ஒப்பந்த தொகையில் இருந்து 1 சதவீதம் அறவிடுவதற்கு பொறுப்புடையவராவார். அதன்படி ஒப்பந்த தொகையில் இருந்து 1 சதவீதம் ரூபா 19,817,578 அறவிடப்பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | செயற்றிட்த்தின் உரிய திகதியில் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக 1 சதவீதம் தண்டப்பணம் உரிய ஒப்பந்த தொகையில் இருந்து அறவிடப்படல் வேண்டும். அதன்படி உரிய செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படவேண்டிய திகதியில் இருந்து 574 நாட்கள் காலதாமதமாக காணப்படுகின்றது. இதற்கு மேலே பந்தி (ii)ல் குறிப்பிட்டது போன்று கொடுப்பனவின் போது உரிய தொகை அறிவிடப்படல் வேண்டும். | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | உரிய நாட்களுக்கு தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 2.10 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டி 3.2 இற் அமைய மூன்று சந்தர்ப்பங்களில் ஒரே வழங்குனரிடமிருந்து இரண்டு விலைகளில் விலைமனு கோரப்படாமல் ரூபா 24,382,509 பெறுமதியான 12800 பிளாஸ்டிக் கூடைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | பெறுகை வழிகாட்டியில் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகை வழிகாட்டி 2.8.4 ற் ஏற்ப பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | பெறுகை வழிகாட்டியில் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஜனவரி 2ம் திகதி களஞ்சியசாலைகளினை பார்வையிட்டபோது 2017ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 12800 பிளாஸ்டிக் கூடைகளில் 1975 கூடைகள் 2019 இறுதிவரைக்கும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது இவை கொள்வனவின் போது இரண்டு விலைகளின் கீழ் கொள்வனவு காணப்படவதனால் குறைந்த விலை ரூபா 1904.48 ன் படி இவற்றின் பெறுமதி ரூபா 3,761,348 | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | தேவையின் அளவினை கருத்தில் கொண்டு கொள்வனவில் ஈடுபடவேண்டும் |

## 03 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டுத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17ம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல 01/2014 ற் அமைய நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்கான கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு இயக்குனர்சபை மற்றும் அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை பிரிவு 2 ன் பந்தி 5 ன் பிரகாரம் எதிர்வரும் நிதி ஆண்டுக்கான | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| இணைந்த வணிக நடவடிக்கைகளுக்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 இன் 02ம் திகதிய பொது வியாபார சுற்றறிக்கை இல பீஈடீ/12 பிரிவு 7.4.1ன் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும். இருப்பினும் மீளாய்வாண்டின் போது இரண்டு தடவைகள் மாத்திரம் கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது கூடியிருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |